DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 485/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரகாஷ் |
| Father / Husband Name | ஜானகிராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 01.06.2026

**குறுக்கு விசாரணை:**

**1.** இந்த வழக்கை எந்த தேதியில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. இந்த வழக்கின் புகாரிலும், பிரமாணவாக்குமூலத்திலும் எந்த தேதியில் கையொப்பம் செய்தேன் என்றால் தெரியவில்லை. புகாரில் என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு எதிரி ரூ.2,50,000/- லட்சம் தரவேண்டும். அதற்கு காசோலை கொடுத்தார், அதை பற்றி எழுதியிருக்கிறோம். நான் எதிரிக்கு ரூ.2,50,000/-லட்சம் கொடுத்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் காசோலை தான் உள்ளது. கொரோனா காலக்கட்டத்தில் எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது கணவரிடம் பணம் கேட்டேன் என்றால் சரிதான். அது எவ்வளவு தொகை என்றால் ரூ.20,000/-. அந்த 20,000/- ரூபாய் கொடுத்துவிட்டுதான், 2,50,000/- கடன் வாங்கினார். இதற்கு முன்பு எதிரி என்னிடம் எத்தனை முறை கடன் வாங்கியுள்ளார் என்றால் 5,6 முறை கடன் வாங்கியுள்ளார். எதிரி வாங்கினாரா அல்லது அவரது கணவர் வாங்கினாரா என்றால் இருவருமே கடன் வாங்குவார்கள்.

2. கடன் கொடுக்கும்போது நான் ஆவணம் ஏதாவது எழுதி வாங்குவேனா என்றால் ஆவணம் எதுவும் வாங்கமாட்டேன். எதிரி எனக்கு சுமார் 15 ஆண்டுகளாக பழக்கம். எதிரி என்ன வேலை செய்துவருகிறார் என்றால் தனியார் நிறுவனத்தில் வேலை செய்துவருகிறார். எதிரியின் மாத சம்பளம் என்ன என்றால் எனக்கு தெரியாது. ரூ.2,50,000/-த்தை எந்தெந்த தேதியில் யார் முன்னிலையில் சென்று கேட்டேன் என்றால் யார் மூலமும் கேட்கவில்லை, நானே நேரில் சென்று கேட்டுள்ளேன், தொலைபேசியிலும் கேட்டுள்ளேன். கொரோனா முடிந்து நான் எந்த தேதியில் போய் கடனை திரும்ப கேட்டேன் என்றால் 20,000/-ரூபாய் கொடுத்த பிறகு இந்த ரூ. 2,50,000/-த்தை தான் வாங்கினார். எதிரி எதற்காக ரூ.2,50,000/- கடன் கேட்டார் என்றால் தென்னம்பட்டில் வீடு கட்டுவதற்காக கேட்டார். அரசு மானியம் வந்ததும் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக சொல்லி கேட்டார். எதிரி கட்டிய வீட்டை போய் பார்த்தேனா என்றால் இல்லை.

3. எதிரி வீடு கட்டுகிறாரா என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. பணத்தை எந்த தேதியில் யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் எதிரி மற்றும் அவரது கணவரிடம் கொடுத்தேன். பணத்தை 05.06.2022 ம் தேதி என் வீட்டில் வைத்து கொடுத்தேன். அதற்கு வெளி சாட்சி யாராவது உண்டா என்றால் இல்லை. எங்கள் ஊர் தலைவர் வேதாச்சலம் என்பவரை எனக்கு தெரியும். மகேஷ் என்பவரையும் தெரியும். எதிரி மகேஷ் என்பவரின் வீட்டில் வேலை செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி பணம் தரவேண்டும் என்று வேதாச்சலம் மற்றும் மகேஷ் முன்னிலையில் பஞ்சாயத்து வைத்தேன் என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்தில் எதிரியின் கணவர் ஒரு லட்சம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேலே சொன்னவர்களை சாட்சியாக விசாரித்தால் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரிதான்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**